கொடுமுடி கோகிலம்

# கே.பி. சுந்தராம்பாள்

வரலாறு



ப. சோழநாடன்

கொடுமுடி கோகிலம்

# கே.பி. சுந்தராம்பாள் வரலாறு

ப. சோழநாடன்

ரிஷபம் பதிப்பகம்
இரண்டாம் தளம்
31/45 இராணி அண்ணா நகர்
பி.டி. ராஜன் சாலை
கே.கே.நகர்
சென்னை - 600 078



## ஸ்ரீமதி கே.பி.சுந்தராம்பாள்

இப்பெண்மணி சிறுவயதிலேயே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்கள். பெரியவர்களானவுடன் முக்கிய பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கினார்கள். பன்முறை கிட்டப்பா அவர்களுடன் கதாநாயகியாக நடித்து பெரும்பெயர் பெற்றார்கள். நடிப்பதில் மிகவும் திறமையுடையவர்கள். ஆயினும் இவருடைய பெயர் தமிழ் நாடெங்கும் பரவச் செய்தது, இவர்களுடைய அபாரமான சங்கீதக் கலையே. நல்ல ராக தாள ஞானமுடையவர். நான் கண்ட அளவில் இவர்களுடைய சங்கீதத்தில் ஈடு ஜோடு இல்லாத பெருமை இவர்கள் பக்க வாத்தியங்கள் இல்லாமலே மிகவும் இனிமையாகப் பாடும் திறமேயாம். அநேக சங்கீத வித்வான்கள் பக்க வாத்தியத்தோடு பாடுவது ஒரு மாதிரியாக இருக்கும். பக்க வாத்தியம் இல்லாமல் பாடுவது வேறு ஒரு மாதிரியாய் இருக்கும். இவரது பாட்டில் அப்படியில்லை. பக்க வாத்தியங்கள் இல்லாமல் பாடினாலும் மிகவும் காதுக்கு இனிமையாயிருக்கும். இது ஒரு அரிய குணம்.

நாடகத் தந்தை

பம்மல் சம்பந்த முதலியார்

'நான் கண்ட நாடகக் கலைஞர்கள்'

---

சிற்பம் பதிப்பகம்